மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (25.11.2023) சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.81 இலட்சம் மதிப்பீட்டில் தானியங்கி சப்பாத்தி செய்யும் இயந்திரம் கொண்ட நவீன சமையலறையினை பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், மருத்துவக்கல்லூரி பேராசிரியர்கள், செவிலியர்கள் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றியக் கழகம் சார்பில் கழக இளைஞரணிச் செயலாளரும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டு – சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா சாலவாக்கம் பஜார் பகுதியில் நேற்று காலை கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் டி.குமார் முன்னிலை வகித்தார். எஸ்.ஆர்.வெங்கடேசன், சத்யா சக்திவேல் வரவேற்றார். என்எஸ்.ரவி, ஞானசேகர், தமிழ்வேந்தன், சுஜாதா ஜெயக்குமார்,,பாலமுருகன், , பாண்டியன், பாபாஷரீப்,, சிவராமன், சத்யா சக்திவேல், துரைவேலு, ரவி, கார்த்திகேயன், மணி, ரத்தினமாலா, சேகர், அன்புராஜ், சுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் - 5000 பேருக்கு உணவு - நல உதவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்! தமிழச்சி தங்கபாண்டியன் - மு.மகேஷ்குமார் - சுபோகான் பங்கேற்பு! சைதை சாதிக் தலைமை!

சென்னை, நவ.26

சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக மாநில இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் தலைமையிலும், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டல குழு தலைவருமான எம்.கிருஷ்ண மூர்த்தி, சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும் பதிமூன்றாவது மண்டல குழு தலைவருமான இரா. துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., சைதை மா.அன்பரசன் ஆகியோர் முன்னிலையில் 5000 பேருக்கு அசைவ உணவினையும், மற்றும் நலதிட்ட உதவிகளை சைதை மேற்கு பகுதி, ஜாபர்கான் பேட்டை, சாரதி நகரில் இன்று (26.11.2023, ஞாயிற்றுக்கிழமை) நண்பகல் 12 மணியளவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளருமான மா. சுப்பிரமணியன் வழங்க உள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு. மகேஷ்குமார், சிறுபான்மை அணியின் மாநில செயலாளர் டாக்டர் சுபேர்கான், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, கழக நிர்வாகிகள் க.தனசேகரன் எம்.சி., பாலவாக்கம் க.சோமு, காசிமுத்துமாணிக்கம், வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகி பாண்டியன்,

வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், தா. மோகன்குமார் எம்.சி., மாவட்ட அமைப்பாளர்கள் வழக்கறிஞர் த.பாபு, நா.மணிகண்டன், எம்.எஸ். அரிபாபு, அஞ்சல் என். ராமன், கோ.பாஸ்கர், செ. ரவி, எஸ்.பிரகாஷ், மணிகண்டன், பா.அருண்குமார், கழக த.ரமேஷ், சி.பரிமேலழகர், சி.சுரேஷ், டாக்டர் அனீஸ்நாகராஜ், வி. ராஜேஷ், எம்.விநாயகமூர்த்தி, ஐ.ஜே.பாண்டியன், க.வீ.தியாகராஜன், ச. சங்கர் கணேஷ், ஆர். கிருஷ்ணகுமார்,

பகுதிக் கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகவுதமன், வி.பி.ஜானகிராமன், வட்ட கழக செயலாளர்கள் அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம். நாகா, மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி. என்.சிவமணி, கிண்டி ஆர். எல்.செல்வம், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்.ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார் ரவி, ஜி.பாபு,

அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.எஸ்.மணி, ஏ.எஸ். பழனி, எல்.கார்த்திக், வே. புருஷோத்தமன், தீ. ராஜ்குமார், பி.நரேஷ்குமார், கு.கார்த்திகேயன், என்.சம்பந்தம், கே.தாஸ், கே.பிரபு, பிரஸ் கார்த்திக், என்.தீனதயாளன், டி.எஸ்.இரவிச்சந்திரன், எஸ்.ரவீந்திரகுமார், ஆர்ட்ஸ் குமார், எம். மாறன், ஜி.வெங்கடேசன், இ.செல்வி, பி.செல்வராணி, எம்.ஜி.மதிவாணன் மற்றும் பகுதி அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

ஜி.ஜெ.மோசஸ், எம். எஸ்.ஷேக் ஆகியோர் நன்றி கூற உள்ளனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் – சாலவாக்கத்தில்

# 46 கிலோ கேக்வெட்டி -அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! கெ.ஞானசேகரன் – டி.குமார் பங்கேற்பு!

காஞ்சிபுரம், நவ. 26 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் - உத்திரமேரூர், சாலவாக்கம் ஒன்றிய தி.மு.க. சார்பில் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு ஆங்காங்கே 46 அடி நீளம் உள்ள 46 கிலோ எடை கொண்ட கேக் வெட்டி கோலாகலமாக கொண்டாடப்பட்டது. காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கேக் வெட்டி பொதுமக்களுக்கு வழங்கினார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் பேருந்து நிலையம் அருகில் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் , என். எஸ்.பாரிவள்ளல் தலைமையில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. 46 கிலோ கேக் வெட்டி பொதுமக்களுக்கு வழங்கினார். இதில் டி குமார் தலைமை செயற்குழு உறுப்பினர் இரா நாகன் பேரூர் செயலாளர் என் எஸ் பாரிவள்ளல் பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார் உள்ளிட்ட ஒன்றிய . பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

மேலும் சாலவாக்கம் ஒன்றியக் கழகம் சார்பில் கழக இளைஞரணிச் செயலாளரும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டு - சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46 வது பிறந்த நாள் விழா சாலவாக்கம் பஜார் பகுதியில் நேற்று காலை கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் டி.குமார் முன்னிலை வகித்தார். கிளை செயலாளர் எஸ்.ஆர்.வெங்கடேசன்,ஊராட்சி மன்ற தலைவர்சத்யா சக்திவேல் அனைவரையும் வரவேற்றார்.

இந்த விழாவையொட்டி இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் 46 வது பிறந்த நாளை குறிக்கும் வகையில் 46 அடி நீளத்தில் 46 கிலோ எடை கொண்ட கேக்கினை ஒன்றிய நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த பிரம்மாண்ட கேக்கினை மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ வெட்டி சிறியவர்கள் சிறுவர் சிறுமியர், பெண்கள், கழக நிர்வாகிகள், பொது மக்கள், வணிகர்கள் ஆகியோருக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் அவைத்தலைவர் என்எஸ். ரவி ஒன்றிய துணை செயலாளர் ஞானசேகர்,தமிழ் வேந்தன், சுஜாதா ஜெயக்குமார்,ஒன்றிய பொருளாளர் பாலமுருகன், மாவட்ட பிரதிநிதிகள் பாண்டியன், பாபாஷரீப், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சிவராமன், ஊராட்சி மன்ற தலைவர் சத்யா சக்திவேல், நிர்வாகிகள் துரை வேலு, ரவி, கார்த்திகேயன் , மணி, ரத்தினமாலா, சேகர்,அன்புராஜ், சுப்பிரமணியன், கல்யாணசுந்தரம், பவுன் சின்ராஜ், நதியா கோபி, வெங்கட்ராமன், முரளி,பலராமன்,விஷ்ணு, அழகப்பன், நடராஜன், ஊராட்சி மன்ற தலைவர்கள் தர்மராஜ், சுந்தரமூர்த்தி, கார்த்திகேயன், நாகம்மாள் மாரி, மஞ்சுளா முருகன், நந்தா, இந்திரா மோகன், கோதண்டராமன், ஜெயகாந்தன், முரளி,விஷ்ணு கோமளா ஐயப்பன், முனுசாமி, சீனிவாசன், பாலு,பரமசிவம், யோகநாதன், அருண் பிரசாத் அரவிந்தன், சந்தோஷ், அஜய், விஜயகுமார், அலெக்ஸ், ரமேஷ், லட்சுமணன், ஜெயபுரி,உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள், மகளிர் சுய உதவிக் குழு பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஜி.நந்தா நன்றி தெரிவித்தார்.

க.கோவிந்தராஜ் நிகழ்ச்சி ஏற்பாடு ! இரா.செந்தில்குமார் முன்னிலை !

# 51வது வட்டத்தில் அமைச்சர் உதயநிதி பிறந்தநாள்!அறுசுவை உணவு!

## தா.இளையஅருணா வழங்குகிறார் ! கலாநிதி வீராசாமி, ஐட்ரீம்ஸ் மூர்த்தி பங்கேற்பு!

சென்னை நவ:26

இராயபுரம் கிழக்கு பகுதி 51வது வட்டம் சார்பில் மாநில இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நாளை (27.11.2023 திங்கட் கிழமை) காலை 10.00 மணியளவில் சஞ்சிவிராயன் கோவில் தெருவில் 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்குதல் நிகழ்ச்சி இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் முன்னிலையில் வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியல் மாவட்டச்செயலாளர் தா.இளையஅருணா தலைமை வகித்து 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கி துவக்கி வைக்கிறார்.

இதில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ,தா. ஜெயபால், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ. மோகன்,மாவட்ட பிரதிநிதிகள் எனாபாரி, கே.பழனிவேல், எஸ்.சுரேஷ், க. கலைச்செல்வன், அத்தோ பி.முனுசாமி, வி.குமார், எம்.என்.வெங்கட், கே.லட்சுமணன்,மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ். குமார், இரா.முருகன், ஜி. மணிகண்டன், க.சுரேஷ், வி.வி.தங்கராஜ், எம்.எம்.சந்துரு,தா.ரவி, எஸ்.மாரி முத்து, என்.சூர்யா, பி.சத்தியநாராயணன், கே.ஆறுமுகம்,கே.சசி, டீ.கவியரசு, தா.நந்து, வி.சரவணன், கே.குபேரன், எம்.மாசிலாமணி, டி.பெருமாள், எம். வல்லவராஜன், எச்.பழனிராஜ்,

வி.செல்லப்பாண்டி, கே. பாலாஜி, ஆர்.ராஜ்குமார்,ஏ. ரகு, எஸ்.சம்பத்,ஜேம்ஸ், பெரோஸ்கான், வி.குமார், தக்காளி பாண்டி,ஏ.சந்திரசேகர், கே.சந்தோஷ், முருகன், கே.பாலா, கோதண்டம், டி.தங்கம்,பன்னீர், பிரதாப்,ராஜசேகர், குமார், நரேஷ், வி.எஸ்.குமார், அஜித், ராஜி,ஞானசேகர், தென்னரசு, சாலமன், பன்னீர்செல்வம்,செட்டி மூ.சந்திரன்,செழியன் ரவி, லோகேஷ்,சுரேஷ், கார்த்திக், சுனில், ஜி.உமாபதி, எஸ்.மாரியப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் – முன்னாள் ஆர்.கே. நகர் பகுதி செயலாளர் நினைவில் வாழும் வே.குமரேசன் அவர்களின் 17ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஏழை எளியவருக்கு வேட்டி சேலை மற்றும் சமபந்தி உணவை மாவட்ட செயலாளர் தா. இளைய அருணா வழங்கினார். உடன் ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, பி.டி.பாண்டி செல்வம், வா.பெ.சுரேஷ், நா.சண்முகம், கி.ராஜேந்திரன், வே.சிவகுமார், இரா.செந்தில்குமார், இரா.லட்சுமணன், என்.மருது கணேஷ், கு.சுந்தர், பி.சேகர், இரா.பாலன், இரா.பொன்முடி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடு கு.ரமேஷ் செய்திருந்தார்.

# 32 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, நவ.26-

தமிழகத்தில் 32 மாவட்டங்களில் இரவு 10 மணி வரை மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், கடலூர், மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்களில் மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து, நாகை, திருவாரூர், தஞ்சை, புதுக் கோட்டை, சிவகங்கை, திருச்சி, கரூர், நாமக்கல், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களிலும் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாவும் கூறப்பட்டுள்ளது. சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணா மலை, நீலகிரி, கோவை, திருப்பூர் மாவட்டங்களில் இடியுடன் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நே.சிற்றரசு தலைமை! எஸ்.ராம்குமார் முன்னிலை!

# சென்னை மேற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் வேண்டுகோள்!

சென்னை, நவ.26-

சென்னை மேற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாவட்ட அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் இன்று (26.11.2023) காலை 9.00 மணியளவில், காம்தார் நகர் 1-வது தெரு, நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெறுகிறது.

இதில் மாநில துணை செயலாளர் எஸ்.ராம்குமார் முன்னிலை வகிக்கிறார்.

ஆகவே சென்னை மேற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா நிகழ்ச்சி

2. நீட் விலக்கு நம் இலக்கு கையெழுத்து இயக்கம் விரைவுபடுத்துவது.

3. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்ட அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்

தா.இளையஅருணா தலைமை ! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை !

# ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் இரு சக்கர வாகனப்பேரணி!

## பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் அறிவிப்பு !

சென்னை, நவ.26-

மாநில உரிமை மீட்புக்கான கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு சேலத்தில் டிசம்பர் 17 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இந்த முக்கியத்துவமிக்க மாநாட்டின் முழக்கத்தை, தமிழ்நாட்டின் பட்டி தொட்டியெங்கும் சேர்க்கின்ற விதமாக, 188 இருசக்கர வாகனங்களைக் கொண்ட வாகனப் பேரணியை கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை எதிரே 15.11.2023 அன்று கழக இளைஞரணி செயலாளர். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார் .

இப்பேரணி 13 நாட்கள் 234 தொகுதிகள் 504 பிரச்சார மையங்கள் 8,647 கிலோமீட்டர் எனலட்சோப லட்ச இளைஞர்களை சந்தித்து விட்டு இன்று (26.11.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை ஆர்.கே.நகர் தொகுதிக்கு வரவிருக்கும் இருசக்கர வாகன பேரணியை சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா. இளையஅருணா தலைமையிலும் ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே. ஜே.எபினேசர் முன்னிலையிலும் ஆர்.கே. நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் வரவேற்கிறார்.

பேரணியை வரவேற்கும் இடம்: சூரிய நாராயண பூங்கா 43(அ) வது வட்டம் காலை 11.00 மணியளவில்

இருசக்கர வாகன பேரணியை அங்கிருந்து வரவேற்று எஸ்.என்.செட்டி தெரு, ஜீவரத்தினம் சாலை, வரதராஜ பெருமாள் கோவில் தெரு, டி.எச் ரோடு, கிராஸ் ரோடு பார்க், மற்றும் ஜீவா நகர் வழியாக சேணி அம்மன் கோவில் தெருவாக வ.உ.சி.நகர் ஐமாஸ்ல் ஆர். கே.நகர் கிழக்கு பகுதி சார்பாக சிறப்புவரவேற்பு நடைபெறுகிறது.

இப்பேரணி சிறப்பு வரவேற்பு முடிந்து இளைய முதலில் தெரு வழியாக ஆர்.கே.நகர் மேற்கு பகுதிக்கு செல்கிறது.

இந்நிகழ்விற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பாக பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் கேட்டுக்கொள்கிறார்.

தலைமைக் கழக உத்தரவின் படியும், திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் – மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் ஆலோசனைப்படியும் சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 12 மற்றும் 13ம் வட்டங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் புதிய வாக்காளர்கள் சேர்த்தல், திருத்தல் முகாம் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளர் பா.பால உமாபதி, மாவட்ட பிரதிநிதி கே.கார்த்திகேயன், வட்ட துணைச் செயலாளர் எஸ்.முத்துராஜ், ராமராஜ் பாக முகவர்கள் ஓய்.எஸ்.ஆர்.ரவி, 13 ஆவது வட்ட செயல்வீரர் டி.இ.பரணி குமார் வீ. சேகர், நா. ராஜராஜன், எம். சீனிவாசன், கழக முன்னோடிகள் நா. அணில் குமார்,ஆர்.செந்தில்குமார், அ.ஸ்டீல் சரவணன் ,டி.சுரேந்தர், ரயில் சீனி, பிபழனி, எஸ்.அருள் ஆகியோர் தூய பவுல் மகாஜன பள்ளி மற்றும் கன்னியாகுருகுலம் அரசு பள்ளி ஆகிய பள்ளிகளில் வாக்காளர் சேர்தல், மற்றும் நீக்குதல் பணிகளை மேற்கொண்டனர்.